

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு போராடும் ; தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் ஒய் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. கம்பம் செல்வேந்திரன் , வைத்தியலிங்கம் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். முன்னதாக கண்டன பொதுக்கூட்டத்தில் ”தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உறுதிமொழி ஏற்றனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஒன்றிய அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் தலைமையில் கம்பம் செல்வேந்திரன் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மார்ச் 18 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு போராடும் ; தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் தளி பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. கண்டன பொதுக்கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார் .

தளி தெற்கு ஒன்றிய செயலாளர் திவாகர் வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய செயலாளர்கள் ஸ்ரீனிவாசலுரெட்டி, நாகேஷ், ரகுநாத், கஜேந்திரமூர்த்தி, ஸ்ரீதர், சின்ராஜ், பாக்கியராஜ், கருணாகரண் ராஜா(எ)தணிகாசலம், பகுதி செயலாளர்கள் ஆனந்தய்யா, வெங்கடேஷ், திம்மராஜ், ராமு, பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர், ஒன்றிய துணை செயலாளர்கள் சீனிவாசன் , திருமேனி வாசுதேவன் , கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய பொருளாளர் சீனிவாசன், மாவட்ட பிரதிநிதிகள் கிரண், சீனிவாசன், சிவகாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம்.செல்வேந்திரன், தலைமை கழக பேச்சாளர்கள் வைத்தியலிங்கம் , ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்தகண்டன பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்து பேசிய கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் பேசும்போது தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணா இரு மொழிக் கொள்கைதான் என சட்டத்தை இயற்றியவர் அதைதான் தமிழக மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். யாரும் இந்தியை படிக்க வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் இந்தியை திணிக்க வேண்டாம். விருப்பம் இருப்பவர்கள் இந்திய படித்துக் கொள்ளலாம் என தெரிவித்து வருகின்றோம் தமிழ்நாட்டில் இரு முழு கொள்கையால் உலகம் எங்கும் இளைஞர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்து வருகின்றனர். எனவே இந்தி மொழியை கட்டாயப்படுத்த கூடாது என கூறினார். முன்னதாக கண்டன பொதுக்கூட்டத்தில் “தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்” என உறுதிமொழி ஏற்றனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஒசூர் மாநகர மேயர் சத்யா, மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு விஜயகுமார், மாநில விவசாய அணி துணை செயலாளர் அரியப்பன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன்,

மாவட்டத் துணை செயலாளர் சின்னசாமி, புஷ்பா சர்வேஸ், பொருளாளர் சுகுமாரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி ,எல்லோராமணி , கிரீஸ் பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் ,சீனிவாசன் ,தனலட்சுமி ,அருணா பூசன் குமார் ,முனிராஜ் , அப்துல் கலாம், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷேக் ரஷீத், இளைஞரணி அமைப்பாளர் சுமன்,

உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பூத் கமிட்டி BLA 2, BLC சார்ந்த ஒருங்கிணைப்பாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பெண்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தளி.தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் நாகராஜ் நன்றி உரையாற்றினார்.

---

### ப.கோவிந்தராசன் தலைமை! கா.பழனியப்பன் வரவேற்புரை!

# நாகை கீழ்வேளூரில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

### என்.கௌதமன் – ஏ.கே.எஸ்.விஜயன் – ஒசூர் அப்துல்ரஹ்மான்பாரி – தமிழ்சாதிக் சிறப்புரை!

நாகை, மார்ச் 18 -

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்வேளூரில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராசன் தலைமை தாங்கினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கா.பழனியப்பன் வரவேற்றார்.

கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளரும், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா. சங்கர், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், இல.மேக நாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதான், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம்நீலமேகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்,ஆல்வாஎடிசன், சோ.பா.மலர்வண்ணன், மகா.குமார், ஆர்.டி.எஸ். சரவணன், உதயம் வே.முருகையன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், தலைமைக் கழக வழக்கறிஞர் மு. தினேஷ்குமார், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் சாகுல்அமீது, பொதுக்குழு உறுப்பினர் கோ.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன், மாநில விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஒசூர் அப்துல்ரஹ்மான் பாரி, தமிழ்சாதிக் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா. முருகையன், எஸ்.பால்ராஜ், பெமுருகானந்தம், அ.பாரிபாலன், இளம்.சுந்தர், த.தமயந்தி, புவனேஸ்வரிசெந்தில், ஆர்.சுரேந்தர், கமல், எஸ்.பாலமுரளி, ஆர்.ஆர்.குலோத்துங்கன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் டி.கலையரசன், ஜி.எல்.அம்பிகாபதி, அங்காடிசேகர், வி.சாய்பாட்சா, எஸ். செல்வா, ஹேமலதாசரத்பாபு, கோ.ஜிவானந்தம், கீழ்வேளூர் பேரூராட்சி தலைவர் இந்திராகாநிதி சேகர், தலைஞாயிறு முன்னாள் பேரூராட்சிதலைவர் இராஜேந்திரன், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம் நன்றி கூறினார். பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! இதுதான் இலக்கு என்ற உறுதிமொழியை நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் முன்னிலையில் உறுதிமொழி ஏற் தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! இது தான் இலக்கு என்ற உறுதி மொழியை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

### சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர் பணிக்கு

# மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இடஒதுக்கீடு!

### தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச் 18 -

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர் பணி நியமனத் தில் மாற்றுத்திறனாளி களுக்கு 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 8 ஆயிரத்து 997 சமையல் உதவியா ளர் காலிப் பணியிடங்களை தொகுப்பூதியத்தின் அடிப்படையில் நிரப்ப முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர் பணி நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பணி நியமனம் செய்யப்படும் சமையல் உதவியாளர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்க உத்தர விடப் பட்டுள்ளதாக கூறப்பட் டுள்ளது.



மன்னார்குடி நகர இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நகர செயலாளர் வீரா கணேசனின் தலைமையில் நடைபெற்றது. நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன், மாவட்ட துணை அமைப்பாளர் வி.கே.எம்.முருகானந்தம், கு.பா.பாபு,நகர இளைஞர் அணி நிர்வாகிகள் சண்.சுதாகர், மு. கார்த்திக், பூபெஷ்கன்னா, வீராஸ்.பிரபு, பங்கேற்றனர். ஜே.சுந்தர், இ.அருண், ரா.விஜய், தே,விஷ்வா உள்ளிட்டோர் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

---

### “ரூ” என்ற எழுத்தை வைத்தே ஒட்டுமொத்த

# பா.ஜ.க.வை அலற விட்டிருக்கிறார் முதல்வர்!

**கி**டைக்கிற கேப்புல எல்லாம் ஆப்பு வக்கிறியே சிவாஜி. விவேக் ரஜினியை பார்த்து கேட்கும் அந்த டயலாக்தான் இன்றைய சங்கிகளுக்கு தலைவர் கொடுத்த இந்த காலணி அடியை பார்த்தவுடன் மைண்ட்ல வந்து நின்னுச்சி.!

இந்தியை திணிப்பதை நிப்பாட்டு, நிப்பாட்டுன்னு சொல்லிட்டே இருக்கோம். கேட்க மாட்டியா.?!

நீ திணிச்சி வச்சிருக்குற இந்தியை நீக்கிட்டு அதுல எங்க தமிழை திணிக்கிறேன் பார்... இந்தியா முழுக்க அலறட்டும்... இனி இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் தாய்மொழிப்பற்று உள்ளோர் எல்லாம், அவரவர் தாய் மொழியிலேயே இந்திய ரூபாயை அடையாளப்படுத்தும் நிலை ஏற்படும் பார். என்று தலைவர் தளபதியார் ஒன்றிய ஆட்சியாளர்களின் தூக்கத்தை கலைத்துப் போட்டிருக்கின்றார்.!

இது. இது. இதுதான் புரட்சி.!

புரட்சித் தலைவர், இரும்புப் பெண்மணி என்று பேர் வச்சிக்கிட்டா பத்தாது..!

ஆளுகின்ற ஒன்றிய அரசின் சர்வாதிகார ஆணவத்தை அடக்க உள்நாட்டில் புரட்சியை தூண்ட வேண்டும். அந்த ஒன்றிய அரசின் அரச பயங்கரவாதத்திற்கு பயப்படாமல் இரும்புத் தலைவனாக உயர்ந்து நிற்க வேண்டும்.!



**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்

இதைக் கண்டு ஒன்றிய அரசு என்ன செய்து விடும்.?! இதோ உடனே டாஸ்மாக்கில் ஆயிரம் கோடி ஊழல் என்று அவர்களின் கிளைக்கழகமான ஈடியை வைத்து கோயபல்ஸ் வேலையை துவங்கிவிட்டது.!

இப்படியெல்லாம் தான் ஒன்றிய ஃபாஸிஸ அரசு செய்யும் என்பதை புரிந்தவராகத்தான். “மரணம் நான் கேட்ட தாலாட்டு” என்று நேற்றே தலைவர் தளபதியார் அறைகூவல் விடுத்து விட்டார்.! எங்கள் தாய் தமிழ்நாட்டிற்கு. கல்விக்காக நியாயமாக வர வேண்டிய இரண்டாயிரத்தி நானூறு கோடி ரூபாய் நிதியை, நாங்கள் இந்தியை ஏற்க வில்லை என்ற காரணத்திற்காக தராமல் நிறுத்தி விட்டீர்கள். அதை அப்படியே மத்திய பிரதேசத்திற்கும், குஜராத்திற்கும் மடை மாற்றி விட்டீர்கள்.

சொல்லப்போனால், இது தான் மிகப் பெரிய்ய ஊழல்..! தமிழ்நாட்டு குழந்தைகளின் உரிமையான 2400 கோடி ரூபாயை சப்பைக் காரணம் காட்டி அபகரித்து விட்டீர்கள்.! இது தான் ஊழல்.!

தலைவர் தளபதியார் உங்களை அலற வைக்க. பக்கம் பக்கமாக எழுதவில்லை. மணிக்கணக்கில் பேசவில்லை. ஒரே ஒரு வார்த்தை கூட அல்ல.

ஒரே ஒரு எழுத்து. “ரூ” அதை வைத்தே ஒட்டுமொத்த சங்கிகளையும் கதற விட்டிருக்கின்றார்.!

இப்பொழுது நீங்கள் சொல்லியிருப்பதோ, ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் என்று. ஆனால் நீங்கள் கிளப்பிவிட்ட ஒரு லட்சத்தி எழுபத்தைந்தாயிரம் கோடி ரூபாய் டுபாக்கூர் ஊழல் பரப்புரைகளை எல்லாம் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

அதைச் சொல்லிச் சொல்லியே நீங்கள் ஆட்சிக்கும் வந்தீர்கள். ஆனால் உங்கள் ஆட்சிக் காலத்தில் தான் அதில் அண்ணன் ஆ. ராசா அவர்கள் ஊழலே செய்ய வில்லை என்று விடுதலை பெற்று தகத்தகாய சூரியனாய் வெளியே வந்தார்.

காரணம். உங்களுக்கும் முன்கூட்டியே தெரியும், அது ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு என்று. ஆனால் உங்கள் கோயபல்ஸ் பிரச்சாரத்தை வைத்து மக்களை மூளைச்சலவை செய்து ஆட்சியைப் பிடித்து விட்டீர்கள். வழக்கு நீதிமன்றத்தில் தோற்றுப் போனது. ஆனாலும் 11 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் நீங்கள் இதுவரை அதற்காக முழு வலிமையுடன் மேல் முறையீட்டுக்கு செல்லவே இல்லை. காரணம் அது பொய் வழக்கு என்று உங்களுக்கு தெரியும்..!

இப்பொழுதோ அதே பாணியில் ஆயிரம் கோடி உருட்டு ஒன்றை கொண்டு வந்துள்ளீர்கள். இது போல இன்னும் சிலபல உருட்டுக்களை அடுத்து தேர்தல்வரை நீங்கள் உருட்டலாம்..!

ஆனால் உங்கள் உருட்டுக்கள்... இனிமேல் தமிழ்நாட்டில் விலை போகாது..!

எங்கள் தலைவர் தளபதியாரின் வியூகங்களும், மக்கள் நல திட்டங்களும்...மக்களோடு மக்களாக... மக்களுக்காகவே அவர் நிற்பதும்.... மீண்டும் உங்களை நோட்டாவிற்கு கீழே கொண்டு செல்லும். எழுதி வைத்துக்கொள்ளுங்கள்..!

---

### தென்காசி மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சி

# ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக்குழுக் கூட்டம்!

### மரு.ராணிஸ்ரீகுமார் எம்.பி. தலைமை! மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலை!

தென்காசி, மார்ச் 18 -

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 15.03.2025 அன்று அரசு மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து, மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், (DISHA COMMITTEE) தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் DISHA குழு தலைவருமான மரு.ராணிஸ்ரீகுமார் தலைமையில்,தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தெரிவித்தாவது.

இந்திய அரசால் செயல்படுத்தப் பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தேசிய சுகாதார திட்டம், தீன தயாள் உபாத்தியாய கிராம மின்வசதி திட்டம், பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம், தூய்மை பாரத இயக்கம், தேசிய ஊரக குடிநீர் திட்டம்,மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை திட்டம்,தேசிய சமூக உதவித் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள்,தேசிய நில ஆவணங்கள் கணினி மயமாக்கல் திட்டம்,பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்,தேசிய நெடுஞ்சாலை திட்டம்,தேசிய மின் ஆளுமைத் திட்டம்,மாவட்ட முன்னோடி வங்கி, மாவட்டத் தொழில்மையம்,பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம், ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்,ஜல் ஜீவன் மிஷன், வேளாண்மைத்துறை, வனத்துறை, மருத்துவத் துறை,பிரதம மந்திரி கிராம முன்னேற்ற திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. மாவட்டத்தில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலன் கருதி விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.மேலும் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும். அனைத்தும் சிறந்த முறையில் செயல்படுத்தி பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடையும் விதத்தில் அரசு அலுவலர்கள் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ,செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சித் துறை) ஏழிசைச் செல்வி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ. சுப்ரமணியன்

### மார்ச் 18 (2012)



காஞ்சிபுரம் நகரக் கழகச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியினை சிறப்பாக மேற்கொண்டவர்.

நகர்மன்ற துணைத் தலைவராகவும், பெருநகர மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடி நிலைக் காலத்தில் ஒரு வருடம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். இதுதவிர கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**